Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

18.04.2020 சனிக்கிழமை



## திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்க முடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஏப். 18
திகதியொன்றை நிர்ணயிக்காமல் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பொதுத் தேர்தலை நடத்த முடியாவிட்டால்,

பக்.2

## மாவட்டச் செயலர்கள் கொழும்புக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 18
அனைத்து மாவட்டங்களினது செயலர்களும் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து மறு ஆய்வு செய்ய இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாகம், உள்துறை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் சிறிபாலா ஹெட்டி

பக்.2

## கொழும்பில் மட்டும் 'கொரோனா' 55

கொழும்பு,ஏப்.18
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்த மாவட்டத்தில் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது.
சுகாதார அமைச்சு இன்று மதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.
அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 45 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 28 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத்

பக்.2

# அரசின் கொரோனா நிவாரணத்தை அரசியல் ஆதாயமாக்கும் அங்கஜன்!







- அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறல்
- தூங்குகிறதா தேர்தல் ஆணைக்குழு?

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
ஆளும் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன், அரசின் நிவாரணங்களை தன் அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்று அரச அதிகாரிகளும், பொதுமக்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

பக்.2

## பாடசாலைகளை ஆரம்பிப்பதை மீள்பரிசீலனை செய்யுங்கள்

கொழும்பு,ஏப்.18
பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
தொற்று நோயியல் நிபுணர்கள் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை மே மாதம் 11ஆம் திகதி ஆரம்பிப்பது தொடர்பான முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

பக்.2

## பாதிப்பு 2,275,000 இறப்பு 155,000!

வுகான், ஏப். 18
கொரோனாவால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 22 லட்சத்து 75 ஆயிரமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 55 ஆயிரமாக அதிகரித்தது.

பக்.2

## 5,000 பஸ்கள், 400 ரயில்கள் திங்கட்லிருந்து பணியில்

கொழும்பு, ஏப். 18
எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின்னர் பஸ்கள் மற்றும் ரயில்கள் ஆகியனவற்றைப் பொதுப்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்த அரசு தீர்மானித்துள்ளது.
அதற்கமைவாக 5 ஆயிரம் அரச பஸ்களும், 400 ரயில்களும் சேவையில் ஈடுபடும் என்று போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அத்தியாவசிய சேவைகளின் கீழ் வரும் தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

பக்.2

## வவுனியாவில் 14 பேருக்கும் கொரோனா இல்லை

வவுனியா,ஏப்.18
வவுனியாவில் நேற்றையதினம் சேகரிக்கப்பட்ட 14 பேரின் இரத்தமாதிரிகளில் கொரோனோத் தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ்பாணத்தில் இடம்பெற்ற மத ஆராதனையில் கலந்துகொண்ட மற்றும் வேறு

பக்.2



## யாழ்.நகரில் சிறு வீதிகளும் முடக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ்ப்பாண நகரப் பகுதியில் சிறு வீதிகளுக்கும் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட் டுள்ளமையை நேற்று அவதானிக்க முடிந்தது. 'நகரப் பகுதிக்குள் பிரிந்து செல்கின்ற கிளை

பக்.2

## வணிகத்தை ஆரம்பியுங்கள்!

### பிரதமர் பச்சைக்கொடி

கொழும்பு, ஏப். 18
மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுடன் நாட்டை மீண்டும் வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நாளை மறுதினம் திங்கட்கிழமைக்குப் பின்னர், பாதிக்கப்படாத மாவட்டங்களில் வணிக நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு அறிவித்துள்ளார். குறித்த பிரதிநிதிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்ததாகவும்

பக்.2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# அரசின் கொரோனா நிவாரணத்தை...

அரசின் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு, தனது அமைப்பாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு அவரது உத்தியோகபூர்வ முகநூல் ஊடாகப் பரப்புரை மேற்கொண்டு வருகின்றார். தேர்தல் சட்டம் நடைமுறையில் உள்ள காலத்தில் அவர் பகிரங்கமாக இத்தகைய பரப்புரைகளை முன்னெடுக்கும் நிலையிலும், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரோ அல்லது உதவித் தெரிவத்தாட்சி அலுவலரோ இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
கொரோனா காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பிரதேச மற்றும் மாவட்டச் செயலக ஒரு தொகுதிப் பணியாளர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். மக்களுக்கான நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளில் இவர்கள் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் இந்த நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் இருப்பதாகப் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.
5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கலில் அரசியல் தலையீடு இருப்பதாகத் தெரிவித்து கிராம அலுவலர் சங்கம் விலகியிருந்த, பின்னர் ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னரே மீண்டும் அந்தப்பணியில் இணைந்திருந்தனர்.
இவ்வாறானதொரு நிலையிலேயே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான அங்கஜன் இராமநாதன், தனது முகநூலில், 'கொரோனா நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லையா ?, நீங்கள் யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சியில் வசிப்பவரா?, கொரோனாவால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளீர்களா?, நீங்கள் அரச உத்தியோகத்தர், ஓய்வூதியம் பெறுநர், சமுர்த்தி பயனாளி அல்லாத ஒருவரா?, கொரோனா அரச நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லையா ?, உடனடியாக எங்கள் இணைப்பாளர்களை அழையுங்கள்' என்று பதிவிட்டுள்ளார்.அத்தோடு யாழ்.மாவட்ட செயலகத்தால் முன்னெடுக்கப்பட்ட நிவாரண விநியோகங்களையும், உதவி வழங்கல்களையும், கொடுப்பனவுகளையும் தான் செய்தது போல சமூக வலைத்தளங்களில் காணொளி ஒன்றையும் அவர் பதிவிட்டுள்ளார்.
அரச நிவாரணங்கள் தொடர்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் மேற்கொளும் இத்தகைய பரப்புரைகள் அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறல்கள். எனினும் இது தொடர்பில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரோ அல்லது உதவித் தெரிவத்தாட்சி அலுவலரோ நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதனால் தேர்தல் திணைக்களம் தூங்குகின்றதா எனப் பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.
@@மேற்படி விடயம் தொடர்பில் இதுவரை எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை" என்று மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்டச் செயலருமான கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். (ஒ,5)

# திகதி குறிப்பிடாமல்...

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பிறிதொரு திகதியை அறிவிக்கும் அதிகாரம் உள்ளது. அந்த அதிகாரம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அறிவித்துவிட்டது.
எனவே, திகதியொன்றை நிர்ணயிக்காமல் தேர்தலை ஒத்திவைப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே இருக்கின்றது எனவும், இந்த விவகாரத்தில் தாம் தலையிடவே மாட்டோம் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

# கொழும்பில் மட்டும்..

தில் 07 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 5 பேரும், குருநாகல், கேகாலை, மாத்தறை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக்களப்பு, பதுளை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதமும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே தனிமைப்படுத்தும் நிலையங்களில் இருந்து 38 பேரும், வெளிநாட்டுப் பிரஜைகள் 3 பேரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இன்று பிற்பகல் ஒரு மணிவரை 244 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 77 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அத்துடன் 7 பேர் உயிரிழந்துள்ளனர். ஏனைய 160 நோயாளர்களில் 84 பேர் கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையிலும், 41 பேர் வெலிக்கந்த ஆதார வைத்தியசாலையிலும், 20 பேர் முல்லேரியா ஆதார வைத்தியசாலையிலும், 15 பேர் சிலாபம் இரணவில கொரோனா சிகிச்சை நிலையத்திலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனைவிட நாடளாவிய ரீதியில் 24 வைத்தியசாலைகளில் மேலும் 103 பேர் கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (சு-22)

# பாடசாலைகளை ஆரம்பிப்பதை...

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் மே மாதம் முதலிரண்டு வாரங்கள் மிகவும் தீர்க்கமான நாள்களாக இருக்கும் என்று அறிவித்துள்ளது. எனவே பாடசாலைகளை ஆரம்பிக்க அவசரப்படத் தேவையில்லை. என்றார். (சு)

# மாவட்டச் செயலர்கள்...

யராச்சி தெரிவித்தார்.
அரசு நிறுவனங்களிலும் எவ்வாறு கடமைகளை மீண்டும் தொடங்குவது என்பது குறித்து இதன்போது தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. அதன் பின்னர் குறைந்த எண்ணிக்கையிலான அத்தியாவசிய ஊழியர்களின் பங்களிப்புடன் முதல் கட்டமாகப் பணிகள் தொடங்கப்படும் என்றும் அமைச்சின் செயலர் தெரிவித்தார்.
இதற்கிடையில், அரசு நிறுவனங்களில் கடமைகள் தொடங்குவது தொடர்பாக அடுத்த வாரம் சிறப்பு சுற்றறிக்கை வெளியிடப்படும் என்று பொது நிர்வாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

# பாதிப்பு 2,275,000...

கொரோனாவால் உலகின் 210 நாடுகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உச்சக்கட்டமாக நேற்று மட்டும் 8,672 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் ஒட்டுமொத்த உயிரிழப்பு எண்ணிக்கை ஒரு லட்சத்து 55 ஆயிரமாக அதிகரித்தது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 22 லட்சத்து 75 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

# 5,000 பஸ்கள்,....

மீண்டும் திறக்கப்பட்டால் பொதுப்போக்குவரத்தை இயக்க போக்குவரத்து அமைச்சில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.
பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தும் போது, சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தவும் இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் தவிர்ந்த ஏனைய நபர்களை பஸ்கள் மற்றும் ரயில்களில் ஏற்றாதிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (த-22)

# வவுனியாவில் 14 பேருக்கும்...

பகுதிகளில் தொடர்புகளை கொண்டிருந்த, வவுனியாவின் காத்தான்கோட்டம் மற்றும் ஓமந்தை,புளியங்குளம் ஆகிய இடங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 14 பேரிடமிருந்து நேற்றும் இரண்டாம் கட்டமாக மாதிரிகள் பெறப்பட்டன. அவை மேலதிக ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக அனுராதபுரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. பரிசோதனை முடிவில் 14 பேருக்கும் கொரோனா தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ-110)

# யாழ்.நகரில் சிறு வீதிகளும்...

வீதிகள் பல மூடப்பட்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமல் குணரத்ன, யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு நீக்கப்படுவதற்குச் சாத்தியம் இல்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-114)

# வணிகத்தை ஆரம்பியுங்கள்....

தானும் அதில் கலந்து கொண்டதாகவும் அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் பந்துல குணவர்தன ஆங்கில ஊடகத்துக்கு தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பின்போது சுகாதார அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் கலந்தாலோசித்து தொழிலாளர்கள் தங்கள் உற்பத்தியை மறுதொடக்கம் செய்யுமாறு கேட்டுக்கொண்டனர்.
சுகாதார முன்னெச்சரிக்கைகளுக்கு உட்பட்டு பாதிக்கப்படாத மாவட்டங்களில் அவர்கள் வேலையை மறுதொடக்கம் செய்யலாம் என்று அமைச்சர் குறிப்பிட்டார். கொழும்பு, கம்பஹா போன்ற அதிக ஆபத்துள்ள மாவட்டங்களில் வணிக நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க நேரம் எடுக்கும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார். (ஒ,5)

# சமூக வலைத் தளங்களில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பிரசாரம்

## இதுவரை 16 பேர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.18

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை குழப்பும் நோக்கில், சமூக வலைத் தளங்களில் உண்மைக்கு புறம்பான தகவல்களைப் பரப்பிய 16 சந்தேக நபர்கள் இதுவரைக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பண்டாரகம, கண்டி, தெஹிவளை, மஹரகம, நுகேகொடை, காலி, வாதுவ, அங்கொடை, பொல்கஹவெல, பெலிகல, கட்டுகஸ்தோட்டை, வெலிமடை, கடவத்தை, ராகம, நொச்சியாகம மற்றும் மீரிகம, திவுலதெனிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இந்த 16 பேரில் 7 பேர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கடந்த 10ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டனர். ஏனைய 9 பேர் அதற்கு முன்னர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நாட்டரிசி எமக்கு மட்டுமே! மட்டக்களப்பில் தீர்மானம்

மட்டக்களப்பு, ஏப்.18

எந்தக் காரணம் கொண்டும் சிவப்பு, வெள்ளை நாட்டரிசியை மட்டக்களப்பில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கொண்டுசெல்ல முடியாது என்று மாவட்டச் செயலகத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார். மட்டக்களப்பில் 20ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்போது மதுபான சாலைகள், உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள், அழகுக்கலை நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை வியாபாரத்துக்கு அனுமதிக்க , மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் விசேட கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டது என்று மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆடைவிற்பனை நிலையங்கள், சிகையலங்கரிப்பு நிலையங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள், நகைவிற்பனை நிலையங்கள் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்ட நேரங்களில் தமது நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும், இதன்போது சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தல் விதி முறைகளான 3 மீற்றர் சமூக இடைவெளி, கடைக்குள் ஐவருக்குட்பட்டவர்கள் மாத்திரம் இருத்தல் போன்ற விதிமுறைகளைப் பின்பற்ற வர்த்தக நிலையங்கள் பொறுப்பெடுக்க வேண்டும்.

இந்தச் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றமையை உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள் பரிசீலிப்பர். பின்பற்றாதவர்களை எச்சரித்தல் தொடர்ந்தும் அறிவுறுத்தலை பின்பற்ற மறுப்போரின் வர்த்தக நிலையங்களை மூடிவிடும் அதிகாரத்தை மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணி அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கியுள்ளது.

திறக்கப்படும் சிகையலங்கார நிலையங்களுக்கு வருகை தருவோர் முடிகளை அழகுபடுத்த தாமாகக் கொண்டுவரும் பாதுகாப்பு அங்கிகளைப் பயன்படுத்த வேண்டும் சில்லறைக்கடைகளில் மக்களுக்குத் தேவையான அளவு அரிசிகளை தட்டுப்பாடின்றியும் வைத்திருக்க வேண்டும். சிவப்பு வெள்ளை நாட்டரிசியை ஒருபோதும் வெளிமாவட்டங்களுக்கு கொண்டுசெல்ல முடியாது. கீரிச்சம்பா இன அரிசியை மாத்திரம் அவ்வப்பகுதி பிரதேச செயலாளர்கள் சிபாரிசில் பெறப்பட்ட பொலிஸ் அனுமதிப்பத்திரம் பெற்று வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்ல முடியும் - என்றார். (ப-150)



# சாராயத்துடன் ஒருவர் கைது

கல்முனை,ஏப்.18

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில் வடிசாராயத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கல்முனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு பிரதான வீதியில் வைத்தே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் சுமார் 21 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், அவரிடமிருந்து 30 லீற்றருக்கும் அதிகமான வடிசாராயமும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-114)

# சட்டவிரோத இறைச்சி ; வீடொன்று முற்றுகை

மட்டக்களப்பு,ஏப்.18

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாடுகளை வெட்டி, இறைச்சி விற்பனை செய்த வீடொன்று சுகாதாரத்துறை அதிகாரிகளால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

அங்கிருந்து 52 கிலோ கிராம் மாட்டு இறைச்சி மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதேச மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல். நௌபர் தெரிவித்தார்.

சந்தேக நபரையும் மாட்டு இறைச்சியையும் ஏறாவூர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் முன்னிலைப்படுத்திய போது அவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு, எச்சரிக்கப்பட்டார். (ஐ-114)





# மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடு மீள ஆரம்பம்

பேருவளை,ஏப்.18

களுத்துறை மாவட்ட பேருவளை மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகள் நேற்று முதல் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளதால், சில்லறை விற்பனையின்றி மொத்த விற்பனை செயற்பாடுகள் மாத்திரம் இதனூடாக முன்னெடுக்கப்படுவதாக, பேருவளை துறைமுக முகாமையாளர் எட்வட் தயாமால் தெரிவித்தார்.

பேருவளைப் பகுதியானது அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், விற்பனைச் செயற்பாடுகள் 5 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-114)



# வாகனங்களுக்கு தொற்றுநீக்கல்

கற்பிட்டி, ஏப்.18

கொரொனா வைரஸ் தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், புத்தளம் பாலாவி கற்பிட்டி வீதியில் பயணிக்கின்ற அனைத்து வாகனங்களுக்கும் கொரோனாத் தொற்றுநீக்கி தெளிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரின் ஒத்துழைப்புடன், கற்பிட்டி பிரதேச சபை இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

பாலாவி கற்பிட்டி பிரதான வீதியின் கரம்பைப் பகுதியில் கற்பிட்டி பிரதேசத்தை நோக்கி உள்நுழையும் அனைத்து வாகனங்களுக்கும், இவ்வாறு கொரோனாத் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கொரோனாத் தொற்றிலிருந்து முழுமையாக பாதுகாப்பைப்பெற முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு, பாலாவி கற்பிட்டி பிரதான வீதியூடாக பயணிக்கும் அனைத்து வாகனச் சாரதிகளும், பயணிகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு, கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஏ.எம்.இன்பாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-114)

# வவுனியாவில் கமால் குணரட்ன



வவுனியா,ஏப்.18

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன நேற்று வவுனியாவுக்கும் பயணத்தை மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சியில் இருந்து நேற்று மாலை முல்லைத்தீவு கேப்பாபிலவு இராணுவ முகாமுக்குச் சென்ற அவர் அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் உலங்குவானூர்தி மூலம் வவுனியாவில் அமைந்துள்ள வன்னிக் கூட்டுப்படைகளின் தலைமையகத்துக்குச் சென்றார். அங்கு கொரோனா பாதிப்பு தொடர்பான வவுனியாவின் தற்போதைய களநிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தார். இதில் வன்னி மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேயர் ஜெனரல் ரோகித தர்மசிறி, விமானப்படைத் தளபதி எயார் மார்சல் சுமங்கல டயஸ், தேசிய புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர் நாயகம், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவ, பொலிஸ், விமானப்படை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர் . (ப-110)

# நாடு இயல்பு நிலைக்குத் திரும்ப பரிசோதனைகளை அதிகரிக்கவும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.18

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி நாட்டை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு, பரிசோதனைகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். அவ்வாறு விஸ்த ரிக்கப்பட்டால் மாத்திரமே நாட்டை மூன்று வலயங்களாக வகுத்து தொகுதி தொகுதியாக விடுவிக்க முடியும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதா வது;

கொரோனா வைரஸ் பரவல் இன்னும் நிறைவடையவில்லை. உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரவலினால் பாதிக்கப் பட்டோரது எண்ணிக்கையும் பதிவாகிய மரணங்களும் அசாதாரணமாக அதிகரித்து வருகின்றன. பெரும்பாலான நாடுகளின் சுகாதார அமைப்புக் கள் வைரஸின் தீவிரமான பரவலுடன் சரிவடைந்து வருகின்றன. நிலவுகின்ற வைரஸ் பரவலைக் கட்டுப்ப டுத்துவதற்காக இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கை கள் பாராட்டத்தக்கவையாகும். சர்வதேச பகுப்பாய்வின் படி இலங்கை கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக துரிதமானதும் முறையானதுமான நடவடிக் கைகளை முன்னெடுத்த நாடு கள் பட்டியலில் ஒன்பதாவது இடத்தைப் பிடித்துள்ளது. நாட்டில் தற்போது காணப்ப டும் நிலைமையைக் கவனத்தில் கொண்டு அதே வேளை சமூக இடைவெளியையும் கவனத் தில் கொண்டு படிப்படியாக நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்கள் தொடர் பில் இம் மாதம் 4 ஆம் திகதி ஜனாதிபதி உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்கு நாம் தெளிவுப டுத்தியிருந்தோம். அதற்கமைய நோயாளர்களிடமிருந்து மற்றவர்களுக்கு வைரஸ் பரவு தல் மற்றும் சமூகத்துக்கிடை யில் பரவுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டை மூன்று பிரதான வலயங்களாகப் வகுத்து அதற் கேற்ப நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று எம்மால் யோசனை முன்வைக்கப்பட்டது. அதற்க மைய அதி கூடிய எச்சரிக்கை வலயம், பாதுகாப்பு வலயம் மற்றும் அவதான எச்சரிக்கை யற்ற வலயம் என்பன பற்றி முன்னரே தெளிவாக எம்மால் விளக்கப்பட்டுள்ளது.

எம்மால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைய நாட்டை பகுதி பகுதியாக வழமைக்குக் கொண்டு வருவ தற்கு தற்போது முன்னெடு க்கப்பட வேண்டிய பிரதான செயற்பாடு நோயாளர்களை இனங்காண்பதற்கான பரிசோத னைகளை விரிவுபடுத்துவதா கும். சுகாதாரத்துறையினால் கூறப்பட்ட முதலாவது கட்ட தொற்றாளர்களுடன் தொடர்பு டைய சுமார் 3000 பேர் கூட இது வரையில் பரிசோத னைக்கு உட்படுத்தல் நிறைவு செய்யப்படவில்லை. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் கூறியதைப் போன்று எமது நாட்டில் நாளொன்று பரிசோத னைக்கு உட்படுத்தக் கூடிய அதிகூடிய எண்ணிக்கை 1500 ஆகும். ஆனால் இலங்கையில் நாளொன்றுக்கு முன்னெ டுக்கப்படும் பரிசோதனை 500 ஆகவே உள்ளது. மிகுந்த அபாயகரமான நிலைமைக்கு செல்லாமலிருப்பதற்காக பரிசோதனைகள் உள்ளிட்ட ஏனைய வளங்களும் விஸ்த ரிக்கப்பட வேண்டும் என்பதற் காக சிறந்தொரு அணுகுமு றையை இப்போதாவது சுகாதா ரத்துறையினர் முன்னெடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கின் றோம். பரிசோதனைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பது நாட்டை மீண்டும் வழமைக்கு கொண்டு வருவ தற்கு மிக முக்கிய காரணியா கும். பரிசோதனைகளை விஸ்தரித்து நாட்டை மீண்டும் வழமைக்கு கொண்டு வரும் செற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் நபர்களை இனங்கண்டு நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளிடம் கோருகின்றோம். நாட்டுக்கு தற்போது அத்தியாவசியமான சுமார் 500 க்கும் அதிகமான மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பிலும் உரிய தரப்பினர் அவதானம் செலுத்த வேண்டும் என்றுள்ளது. (ப)

SRI LANKA POST

## ஏப்ரல் 25 இல் மீண்டும் தபால்!

கொழும்பு,ஏப்.18

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் தபால் பொதி மற்றும் கடிதங்களை விநியோ கிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தபால் மா அதிபர் ரஞ்சித் காரிய ரத்ன தெரிவித்தார். சுமார் 3 இலட்சம் தபால் பொதிகள் மத்திய தபால் பரிவர்த் தன நிலையத்தில் தேங்கியுள்ளன. இவற் றைத் தரம் பிரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 25 ஆம் திகதி விநியோகம் ஆரம்பிக்கப்ப டும்.

குறிப்பிட்ட அளவான ஊழியர்களே இந்த நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட் டுள்ளனர். அதேவேளை தபால் நிலையங்கள் ஊடாக நோயாளர்களுக்காக விநியோ கிக்கப்பட்டு வரும் மருந்துகளும் உரிய முறையில் விநியோகிக்கப்படு கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)



## மாட்டின் காலை உடைத்து கடத்தல்

### இருவர் கைது

கொழும்பு,ஏப்.18

மாட்டின் காலை உடைத்து முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் மெதகமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மொனராகலை மெத கம பக்கனிகலை வைத்து இருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். சம்பவத்து டன் தொடர்புடைய மேலும் மூவர் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் தனர். மேலதிக விசாரணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## சுமுக நிலைக்கு நாடு மாறவேண்டும்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 18

சமூகத்துக்குள் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க முடிந்துள்ளது. நாட்டை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தனது தனிப்பட்ட நம்பிக்கை என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சுமார் ஒரு மாத காலமாக ஊரடங்கு நடைமு றைப்படுத்தப்பட்டு நாட்டை கட்டுக்குள் வைத்துள்ளோம். நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் பிரச்சினைக்குரிய நிலைமையாக மாறி வருகிறது. தினமும் ஊரடங்கால் நாட்டை மூடி வைக்க வேண்டும் என்று நான் நம்பவில்லை. சமூகத்துக்குள் நோய் பரவாத அளவுக்கு நிலைமை இருப்ப தால், நாட்டை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டு வருவது குறித்து சிந்திக்க தற்போது காலம் வந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டியுள் ளது. மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள் ளது. என்றார். (த)



## கொரோனா நிதியம் 737 மில்லியன்

கொழும்பு, ஏப். 18

கொவிட்19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 737 மில்லியனை கடந்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

“ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வினால் சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியம் கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

இலங்கை வங்கி நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கமுடைய கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொருவருக்கும் அன்பளிப்புகளை அல்லது நேரடி வைப்புகளைச் செய்ய முடியும். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்துக்கு செய்யப்படும் அன்ப ளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகி ராப் ஊடாக நிதியை வைப்பிலிட முடி யும்.

0112354479/0112354354 என்ற தொலை பேசி இலக்கங்களின் ஊடாக பணிப்பா ளர் நாயகம் (நிர்வாகம்) கே.பீ. எகொட வெலேவுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களை தெரிந்துகொள்ள முடியும்” என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)

# யாழிலுள்ள மட்டக்களப்பு வாசிகள் சொந்த இடத்துக்கு செல்ல ஏற்பாடு

*யாழ்ப்பாணம், ஏப்.18*

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 345 பேரும் அவர்களுடைய சொந்த இடங்களுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் உறுதியளித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு, போரதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, வாழைச்சேனை, காத்தான்குடி மற்றும் சில பிரதேசங்களைச் சேர்ந்த அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் 345 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல பகுதிகளில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் இவர்களது குடும்ப உறுப்பினர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து மட்டக்களப்பில் தமது அன்றாட வாழ்வை நடத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர் மாணிக்கம் உதயகுமார், யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகத்தை தொடர்பு கொண்டு விளக்கியுள்ளார். இதனை அடுத்தே யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவதாகத் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு பின் அவர்களை தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (ப-114)

## சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா

# நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபட தடை விதிக்கவும்

### பொதுபலசேனா கோரிக்கை

*கொழும்பு, ஏப். 18*

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நிரபராதி என்று நீதிமன்றால் உறுதிப்படுத்தப்படும் வரை அவர் சட்ட மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பு வலியுறுத்தியிருக்கிறது.

இது குறித்து பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவுக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் குண்டுதாரிகள் இருவருடன் தொடர்புகளைப் பேணினார் என்றும் அவர்களுடன் இணைந்து பல்வேறு அமைப்புக்களிலும் வெவ்வேறு பதவிகளை வகித்தார் என்றும் குண்டுத்தாக்குதலை மேற்கொள்வதற்கான திட்டத்திலும் பங்குகொண்டார் என்றும் சந்தேகிப்பதாக கடந்த 15 ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒருவர் குற்றவாளி என்பது நிரூபணமாகும் வரை அவர் நிரபராதியாகவே கருதப்பட வேண்டும் என்பதை நாமறிவோம். எனினும், இந்தச் சட்டத்தரணி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் பாரதூரத்தன்மையைக் கருத்திற்கொண்டு விசாரணைகளின் பின்னர் அவர் நிரபராதி என்பது நீதிமன்றால் உறுதிசெய்யப்படும் வரையில் அவரை சட்டத்துறையில் பணியாற்ற அனுமதிப்பது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம் எனக் கருதுகின்றோம். அதுமாத்திரமன்றி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நிரபராதி என்பது நிரூபணமாக முன்னர் அவர் தனது தொழிலில் ஈடுபட அனுமதியளிக்கும் பட்சத்தில் மக்கள் நீதிமன்றின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை இழப்பதற்கும் வாய்ப்புள்ளது என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த)

# குருதிக் கொடை முகாம்

*யாழ்ப்பாணம்,ஏப்.18*

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இளைஞர் துறை ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நேற்று ஆரம்பமானது.

நெருக்கடியை தவிர்த்து சமூக இடைவெளியை பேணும் பொருட்டு ஒரு நாளைக்கு 15 பேர் குருதி வழங்கக் கூடிய வகையில் குருதிக் கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் நடைபெறும் இந்த முகாம் எதிர்வரும் 20,23,24 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்க மதியம் ஒரு மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ-7)



# மின்னல் தாக்கி சிறுமி உயிரிழப்பு

*கொழும்பு, ஏப்.18*

கொஸ்லந்த, பட்டியபொல பகுதியில் மின்னல் தாக்கியதில் 11 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தத் துயரச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை நடந்துள்ளது. மரமொன்றின் கிளையில் ஏறி நின்ற சிறுமி மின்னல் தாக்கத்துக்குள்ளாகியுள்ளார். சிறுமி, வெல்லவாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-22)

## சமுர்த்தி உதவியில் முரண்பாடு

# தவறான முடிவெடுக்க முற்பட்ட இளம் பெண்

*கொடிகாமம், ஏப். 18*

மக்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கும் திட்டத்தில் சமுர்த்தி அலுவலர் அந்தப் பெண் விடயத்தில் பாரபட்சம் காட்டியதால் எழுந்த முரண்பாட்டையடுத்து இளம் குடும்பப் பெண் ஒருவர் தவறான முடிவெடுக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கொடிகாமம், பலாவி பகுதியில் நேற்று இடம்பெற்றது தவறான முடிவெடுத்து நஞ்சு அருந்திய நிலையில் குறித்த பெண், உறவினர்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன்னர் வரை, சமுர்த்தித் திட்டத்தில் இணைந்து உள்ளவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்ட பின்னரே சமுர்த்தியில் புதிதாக இணைந்தவர்களுக்கு உதவிகள் வழங்கமுடியும் என்று சமுர்த்தி அலுவலர் கூறி அங்குள்ள இரண்டு குடும்பங்களுக்கு நேற்று சமுர்த்தி உதவியை வழங்க மறுத்துள்ளார். ஏனையோருக்கு வழங்கப்பட்ட பின்னரே புதிய பதிவுடையவர்களுக்கு வழங்குவதைத் தீர்மானிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதன்போதே இரு தரப்பினருக்கும் முரண்பாடு ஏற்பட்டது என்றும் தன் மீது தாக்குதல் நடத்த முற்பட்டனர் என்றும் சமுர்த்தி அலுவலர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். எனினும், தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இரு தரப்பினரையும் அழைத்து இணக்கமாகச் செல்லுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவுறுத்தி அனுப்பியிருந்தார். அதன் பின்னரும் முரண்பாடு நீடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் சமுர்த்தி அலுவலர் தனக்கு அவமானத்தை ஏற்படுத்துகிறார் என்று குற்றஞ் சாட்டியே, குறித்த இளம் குடும்பப் பெண் தவறான முடிவெடுக்க முற்பட்டார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (த-159)

# கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்குச் சலுகை

*கொடிகாமம், ஏப்.18*

கல்விக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு சில சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் , கல்விக் கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் இன்னலுக்கு உள்ளாகியுள்ள அதிபர், ஆசிரியர்களைப் பல்வேறு வகையில் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கிய இந்நிலையில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆறு பேரும் தொடர்ந்து மேற்கொண்ட போராட்டத்தின் விளைவாக ஏப்ரல் 15ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் மேற்கொண்ட தீர்மானத்தின் படியே இவ்வாறு சலுகைகள் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட மாதாந்தத் தவணைக் கட்டணத்திலிருந்து அங்கத்துவக் கட்டணமாக 455 ரூபா மட்டும் ,கடனுக்கு உரிய வட்டித் தொகை தவிர்ந்த மிகுதிப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளும் வகையில் விசேட கணக்குக்கு மாற்றப்படும். எனினும் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பணிப்பாளர்கள் வட்டியுடன் கூடிய முழுமையான மாதத்தவணை பணத்தையும் அங்கத்தவர்களுக்கு மீளச் செலுத்துமாறு கோரிக்கையை முன்வைத்த போதும் தற்போது நிர்வாகத்தில் உள்ள பணிப்பாளர் சபை அதை நிராகரித்த செயலானது அங்கத்தவர்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும். மே மாதம் அங்கத்தவர்களின் சம்பளத்திலிருந்து வட்டியுடன் கூடிய முழுமையான தொகையை தவிர்த்து மாதாந்த அங்கத்துவப் பணம் மாத்திரம் அறவிடப்படும். அத்தோடு இச்சலுகை கல்வி கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ப-159)

## பொலிஸ் நிலையத்திலும் தொற்று நீக்கி விசிறல்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கான கிருமித் தொற்று நீக்கும் மருந்துகள் விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாக நேற்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கிருமி தொற்றுக்களை நீக்கும் மருந்துகள் விசிறப்பட்டன. அத்துடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பொது இடங்களுக்கு முதல் கட்டமாக மருந்து விசிறும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனையடுத்து பொது இடங்கள் வர்த்தக நிலையங்கள் என்பவற்றிற்கும் மருந்துகளை விசிறும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-20)





## சீனாவிலிருந்து இலங்கைக்கு மருந்துப் பொருள்கள் வருகை

கொழும்பு, ஏப்.18

இலங்கைக்கு வழங்குவதற்காக சீனாவிலிருந்து 16 மெற்றிக் தொன் மருந்துப் பொருள்களுடனான விமானம் ஒன்று நேற்றிரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

தற்போது நாட்டில் பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்று நீக்கலுக்கான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களை இலங்கை அரசுக்கு சீனா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த மருந்துப் பொருள்களே சீனாவின் 'சைனா ஈஸ்டன் 231' என்ற விமானம் மூலமே கட்டுநாயக்கவை வந்தடைந்தது. (ஐ)

## ஊரடங்கு வேளையில் வெட்டிப் படுகொலை!

கொழும்பு, ஏப்.18

வெள்ளவத்தை, சுவர்ணா வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஊரடங்குச் சட்ட வேளையில் நேற்றிரவு இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்தக் கொலைச் சம்பவம் நடந்துள்ளது. சம்பவத்தில் வெட்டுக்காயங்களுக்குள்ளான நபர், களுபோவில போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த 34 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சு-22)

## 5 ஆயிரம் ரூபா வழங்குவதில் கிராமசேவகர்கள் இணைவு

### ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர்

கொழும்பு, ஏப். 18

5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் செயற்பாட்டை மீள ஆரம்பிப்பதற்கு இலங்கை கிராம அலுவலர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்காக நேற்று மீண்டும் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன.

எவ்வாறாயினும், கிராம அலுவலர்களும் சில தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சமுர்த்தி அலுவலர்களும் இந்த நடவடிக்கையிலிருந்து நேற்று விலகியிருந்தனர்.

சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள், உள்ளூராட்சி வட்டாரப் பிரதிநிதிகள் ஊடாக நாட்டின் சில பகுதிகளில் நேற்று விண்ணப்பங்களை விநியோகித்தனர். சில பகுதிகளில் மக்களுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை.

வாழ்வாதாரத்தை இழந்த மக்களைத் தெரிவு செய்து 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் திட்டம் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி ஆரம்பமானது. இந்தக் கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்காக வட்டாரப் பிரதிநிதி, கிராம அலுவலர் உள்ளிட்ட 5 அரச அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச சுற்றறிக்கை மூலம் அறிவித்தார். எனினும், கடந்த 15ஆம் திகதி இந்த விடயம் தொடர்பில் மற்றுமொரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட காத்திருப்புப் பட்டியலில் 19 இலட்சம் குடும்பங்கள் உள்ளன என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் மீண்டும் விண்ணப்பங்களைக் கோருவதன் மூலம் பட்டியல்களை மீளாய்வு செய்யுமாறு மற்றுமொரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இந்தப் பின்புலத்திலேயே 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டத்திலிருந்து கிராம அலுவலர்கள் விலகினர்.

இதேவேளை, 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான தெரிவு நடவடிக்கையிலிருந்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை நீக்கி அரச அலுவலர்களை மாத்திரம் ஈடுபடுத்துமாறு சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளது. எனினும், அகில இலங்கை ஐக்கிய சமுர்த்தி அதிகாரிகள் சங்கம் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-22)

## 13 பேரின் மாதிரிகள் முல்லையில் சோதனை

முல்லைத்தீவு, ஏப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை கொரோனாத் தொற்றுக் கண்டறியப்படாத நிலையில் 625 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டுள்ளனர்.

எவருக்கும் கொரோனா தொற்று அறிகுறிகள் காணப்படாத நிலையில், கடந்த 9 ஆம் திகதி மூவரின் மாதிரிகள் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டன. அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து 13 பேருக்கான மாதிரிகள் இன்று பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன என்று முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர்களில் ஏற்கனவே எடுக்கப்பட்ட மூவரினதும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து கண்காணிப்பு நிலையங்களில் 14 நாள்கள் கண்காணிக்கப்பட்டு மீண்டும் வீடுகளில் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டுவரும் 10 பேரின் மாதிரிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் மாவட்ட மருத்துவமனைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் அழைத்து வரப்பட்டு, அவர்களின் மாதிரிகள் மருத்துவர்களால் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அவை அனைத்தும் யாழ். பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான அறிக்கை நாளை கிடைக்கும் என்று முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-19)

## மரக்கறிவகைகள், பழவகைகள் நியாய நிலையில் கொள்வனவு

முல்லைத்தீவு, ஏப்.18

முல்லைத்தீவு மாவட்ட தண்டுவான், பழம்பாசி கிராம விவசாயிகளின் மரக்கறிவகைகள், பழவகைகள் நியாயமான விலையில் கொள்வனவு செய்யும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கபட்டது.

முல்லைத்தீவு, மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தது. ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில் பெரும் இடர்களைச் சந்தித்து வந்த நிலையிலேயே விவசாயத் திணைக்களம் இவ்வாறானதொரு ஏற்பாட்டைச் செய்துள்ளது. விவசாயிகளிடமிருந்து நியாய விலையில் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறிகள், பழங்கள் என்பன மக்களுக்கும் நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டன. (ப-222)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 18.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.